நெல்லியாளம் நகராட்சி அலுவலகம்,
பந்தலூர், நீலகிரி மாவட்டம்.

**<u>சாதாரணக்கூட்டம் 31 /08 /2021 செவ்வாய்கிழமை,</u>**

**<u>பொருள் எண்.1</u>**

நெல்லியாளம் நகராட்சிக்கு சிறப்பு சாலை திட்டத்தின் கீழ் 10 பணிக்கு ரூ.100.00 இலட்சத்தில் (சிறப்பு சாலை திட்டம் 90 சதவீதம் மற்றும் நகராட்சி பங்களிப்பு 10 சதவீதம்) நிதி ஒதுக்கீடானது அரசு கூடுதல் தலைமை செயலாளர், நகராட்சி நிர்வாக மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் தலைமையில் நடைபெற்ற சிறப்பு சாலை திட்டம் 2020-2021 -க்கான திட்ட அனுமதி குழுவில் இந்நகராட்சிக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (2020-2021 ஆம் ஆண்டின் தமிழ்நாடு சிறப்பு சாலைகள் திட்ட அனுமதி குழு நாள்.11.12.2020)

மேற்கண்ட சாலை பணிக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் செயல்முறைகள் Roc.No.20557/2020/E3 நாள் 15.12.2020–ன் படி நிர்வாக அனுமதி அளித்து உத்திரவிடப்பட்டுள்ளது. மேற்படி இப்பணிக்கு வழங்கப்பட்ட சிறப்பு சாலை திட்டத்தின் 90 சதவீதம் நிதியானது கடனாக இந்நகராட்சிக்கு அனுமதிக்கப்பட்டுள்ளது. இந்நகராட்சிக்கு வரும் நிதியானது குறைவாக இருப்பதாலும் செலவுகள் அதிகமாக இருப்பதாலும் இக்கடனை பெற்று பணிகள் மேற்கொள்ள இயலாத நிலையில் உள்ளது. எனவே இப்பணிக்கு வழங்கப்பட்ட நிர்வாக அனுமதியினை இரத்து செய்வதற்கு கீழ்காணும் இப்பணிகளை இரத்து செய்யுமாறு தனிஅலுவலரின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ எண் | பணியின் பெயர் | மதிப்பீடு தொகை (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|
| சிறப்பு பகுதி மேம்பாட்டு திட்டம்– 2020–2021 | | |
| 1 | நெல்லியாளம் நகராட்சி வார்டு எண் 20 உப்பட்டி பூமரம் பகுதியில் பேவர்பிளாக் சாலை அமைத்தல் | 10.00 |
| 2 | நெல்லியாளம் நகராட்சி வார்டு எண் 21 உப்பட்டி கே.கே நகர் முதல் செட்டிவயல் வரை பேவர்பிளாக் சாலை அமைத்தல். | 10.00 |
| 3 | நெல்லியாளம் நகராட்சி வார்டு எண் 20 உப்பட்டி முதல் செட்டிவயல் வரை பேவர்பிளாக் சாலை அமைத்தல் | 10.00 |
| 4 | நெல்லியாளம் நகராட்சி வார்டு எண் 4 தேவாலா அட்டி அருகே உள்ள அங்கன்வாடி பகுதியில் பேவர்பிளாக் சாலை அமைத்தல். | 10.00 |
| 5 | நெல்லியாள நகராட்சி வார்டு எண் 4 தேவாலா அட்டி முதல் தேவாலா அட்டி நடுநிலைப்பள்ளி வரை பேவர்பிளாக் சாலை அமைத்தல். | 10.00 |

| | | |
|---|---|---|
| 6 | நெல்லியாளம் நகராட்சி வார்டு எண் 1 குன்றில்கடவு ST காலனி பகுதியில் பேவர்பிளாக் சாலை அமைத்தல். | 10.00 |
| 7 | நெல்லியாளம் நகராட்சி வார்டு எண் 1 கோட்டக்குன்னு ST காலனி பகுதியில் பேவர்பிளாக் சாலை அமைத்தல். | 10.00 |
| 8 | நெல்லியாளம் நகராட்சி வார்டு எண் 12 கூவமூலா ST காலனி பகுதியில் பேவர்பிளாக் சாலை அமைத்தல். | 10.00 |
| 9 | நெல்லியாளம் நகராட்சி வார்டு எண் 10 கைதக்கொல்லி ST காலனி பகுதியில் பேவர்பிளாக் சாலை அமைத்தல். | 10.00 |
| 10 | நெல்லியாளம் நகராட்சி வார்டு எண் 5 பாண்டியார் முதல் ஆமைக்குளம் வரை பேவர்பிளாக் சாலை அமைத்தல். | 10.00 |
| | மொத்தம் | 100.00 |

**அலுவலக குறிப்பு**

அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.2**

2017–2018 ம் ஆண்டு Turip திட்டத்தின் கீழ் பந்தலூர் அண்ணாநகர் வார்டு எண்.13, தேவாலா அட்டி சாலை வார்டு எண்.4 மற்றும் புளியம்பாறை கோழிக்கொல்லி வார்டு எண்.5 ஆகிய பகுதிகளில் தார்சாலை மேம்படுத்துதல் ஆகிய பணிகளுக்கு ரூ.200.00 இலட்சத்திற்கு தார்சாலை அமைக்கப்பட்டு பணி முடிவு அறிக்கை தனி அலுவலரின் பார்வைக்கும், பதிவிற்கும் சமர்பிக்கப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | பணியின் மதிப்பீடு அளவு விபரம் | பணி செய்த அளவு விபரம் | கூடுதலாக பணி செய்யப்பட்ட அளவு விபரம் |
|---|---|---|---|---|
| 1 | PCC 1:4:8 | 65.00 $M^3$ | 127.83 $M^3$ | 62.83 $M^3$ |
| 2 | Centering | 850.00 $M^2$ | 944.97 $M^2$ | 94.97 $M^2$ |
| 3 | Road Marking | 555.00 $M^2$ | 676.22 $M^2$ | 121.11 $M^2$ |

**மதிப்பீட்டிற்கு தொகைக்கு மிகாமல் பணிகள் மேற்கொள்ளப்பட்டதற்கு தனி அலுவலரின் ஒப்புதலுக்கு.**

**அலுவலக குறிப்பு.**

**அனுமதிக்கலாம்.**

பொருள் எண்.3

2018–2019 ம் ஆண்டு Turip திட்டத்தின் கீழ் தேவாலா அட்டி வார்டு எண்.10,11 மற்றும் 4. கனடியன் பாடி முதல் சேலக்குன்னா சாலை வார்டு எண். 2, கரியசோலை முதல் சேலக்குன்னா வார்டு எண்.1, சேலக்குன்னா முதல் பொன்னமாபள்ளம் வார்டு எண்.1 மற்றும் கொளப்பள்ளி முதல் உப்பட்டி புஞ்சவயல் சாலை வார்டு எண்.18 மற்றும் 19 ஆகிய பகுதிகளில் தார்சாலை மேம்படுத்துதல் ஆகிய பணிகளுக்கு ரூ.300.00 இலட்சத்திற்கு தார்சாலை அமைக்கப்பட்டு பணி முடிவு அறிக்கை தனி அலுவலரின் பார்வைக்கும், பதிவிற்கும் சமர்பிக்கப்படுகிறது.

| வ. எ ண் | பணியின் விபரம் | பணியின் மதிப்பீடு அளவு விபரம் | பணி செய்த அளவு விபரம் | கூடுதலாக பணி செய்யப்பட்ட அளவு விபரம் |
|---|---|---|---|---|
| 1 | Advanced patch | **315.00** $M^3$ | **376.93** $M^3$ | **61.93** $M^3$ |
| 2 | Road Marking | **1170.00** $M^2$ | **1375.34** $M^2$ | **205.34** $M^2$ |

**மதிப்பீட்டிற்கு தொகைக்கு மிகாமல் பணிகள் மேற்கொள்ளப்பட்டதற்கு தனி அலுவலரின் ஒப்புதலுக்கு.**

**அலுவலக குறிப்பு**

**அனுமதிக்கலாம்.**

பொருள் எண்.4

2019–2020 ம் ஆண்டு Turip திட்டத்தின் கீழ் செம்மண் சாலை வார்டு எண்.16, செம்பன் வயல் சாலை வார்டு எண்.17, சாமியார்காலனி சாலை வார்டு எண்.3, அத்திக்குன்னா முதல் கரியசோலை சாலை வரை வார்டு எண். 1,2. தேவாலா காவல் நிலைய சாலை வார்டு எண்.9., நெல்லியாளம் வாளவயல் சாலை வார்டு எண். 1 தேவாலா பஜார் முதல் ரவுஸ்டன்முல்லை சாலை வார்டு எண். 9,10. மற்றும் இன்கோநகர் சாலை வார்டு எண்.15 தார்சாலை மேம்படுத்துதல் ஆகிய பணிகளுக்கு ரூ.300,00 இலட்சத்திற்கு தார்சாலை அமைக்கப்பட்டு பணி முடிவு அறிக்கை தனி அலுவலரின் பார்வைக்கும், பதிவிற்கும் சமர்பிக்கப்படுகிறது.

| வ.எ ண் | பணியின் விபரம் | பணியின் மதிப்பீடு அளவு விபரம் | பணி செய்த அளவு விபரம் | கூடுதலாக பணி செய்யப்பட்ட அளவு விபரம் |
|---|---|---|---|---|
| 1 | Advance patch | **315** $M^3$ | **376.93** $M^3$ | **61.93** $M^3$ |
| 2 | Thermoplastic compond | **1170** $M^2$ | **1375.34** $M^2$ | **205.34** $M^2$ |

**மதிப்பீட்டிற்கு தொகைக்கு மிகாமல் பணிகள் மேற்கொள்ளப்பட்டதற்கு தனி அலுவலரின் ஒப்புதலுக்கு.**

**அலுவலக குறிப்பு**

**அனுமதிக்கலாம்.**

**பொருள் எண்.5**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் இணையதளம் மூலம் மற்றும் கடிதம் வாயிலாக புதிய தெருவிளக்குகள் அமைக்க பெறப்படும் விண்ணப்பங்களை நேரில் சென்று ஆய்வு செய்து அவ்விடத்தில் தெருவிளக்குகள் அமைக்க வரைபடம் தயார் செய்து தெருவிளக்குகள் அமைக்க இணையதளம் மூலம் மின்வாரியத்திற்கு விண்ணப்பம் பதிவு செய்யவும், பதிவு கட்டணம் மற்றும் அதற்குண்டான செலவினத்தொகைக்கான கேட்பு கிடைக்கபெற்றவுடன் தொகை செலுத்த 2021–2022 ஆம் ஆண்டிற்கு உத்தேச செலவினத்தொகை ரூ.500000/–இலட்சத்தில் தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.6**

இந்நகராட்சியில் பொதுசுகாதாரப் பணிகளுக்காக 50 துப்புரவு பணியாளர்களை ஒப்பந்த அடிப்படையில் M/s.அட்சயா அசோசியேட்ஸ், கூடலூர் என்ற நிறுவனத்தின் மூலம் பணியமர்த்தப்பட்டு பணிகள் மேற்கொள்ளப்பட்டு வந்தது. தற்போது மேற்படி நிறுவனத்தின் ஒப்பந்தம் 31/08/2021–ல் முடிவடைவதால் மேலும் ஒரு மாத காலத்திற்கு 01/09/2021 முதல் 30/09/2021 வரை அத்தியாவசிய பணி என்பதால் ஒப்பந்தம் நீட்டிப்பு செய்து அதற்கான பட்டியல் தொகை வழங்கவும் தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

பொதுசுகாதாரப் பணியின் அவசர அவசியம் கருதி அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.7**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட ஏலியாஸ் கடை பகுதியில் உள்ள அரசு டேனடீ மருத்துவமனைக்கு தெருவிளக்கு வசதி இல்லாததாலும், மேலும் தற்போது பெருந்தொற்று தாரணமாக நோயாளிகள் அதிக அளவில் மருத்துவமனையில் உள்ளதால் தெருவிளக்கு அமைக்க வேண்டியது அவசியமாகிறது. பணியின் அவசரம் அவசியம் கருதி மேற்க்கொள்ள தோராயமாக ஆகும் செலவினம் ரூ.0.44 இலட்சம் இச்செலவினத்தை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும், அவசரம் அவசியம் கருதி நகராட்சிகளின் சட்ட விதிகள் 1920 பிரிவு 15ன் கீழ் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திரு.தெய்வேந்திரன், ஒப்பந்ததாரருக்கு ரூ.0.44/– தொகை வழங்கப்பட்டதற்கும் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதி அளிக்கலாம்.

**பொருள் எண்.8**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட புளியம்பாறை பகுதியில் உள்ள சாலையில் சமீபத்தில் பெய்த கனமழையால் பல ஆண்டுகளுக்கு முன் பேரூராட்சியால் கட்டப்பட்டுள்ள பாலம் இடிந்துள்ள நிலையில் இச்சாலையின் வழியாக வாகனங்கள் சென்று வர இயலாததால் கோழிக்கொல்லி, காப்புமேளா மற்றும் முண்டக்குன்னு ஆகிய பகுதிகளுக்கு சென்று வர தற்காலிகமாக நடைபாலம் மற்றும் நடைபாதை அமைத்தல் பணியினை உடனடியாக செய்து முடிக்க வேண்டி உள்ளதால் மேற்கண்ட பணியினை செய்து முடிக்க தோராயமாக ஆகும் செலவினம் ரூ.4.40/– இலட்சம். இச்செலவினத்தை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும், அவசரம் அவசியம் கருதி நகராட்சிகளின் சட்ட விதிகள் 1920 பிரிவு 15ன் கீழ் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திரு.நசுருதீன், ஒப்பந்ததாரருக்கு ரூ.424586/– தொகை வழங்கப்பட்டதற்கும் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதி அளிக்கலாம்.

**பொருள் எண்.9**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட புளியம்பாறை பகுதியில் கடந்த ஆண்டு பெய்த கனமழையால் மிகவும் பழமையான நடைபாலம் இடிந்துவிட்டபடியால் நுழைவு வரித்திட்டம் 2019–2020ஆம் ஆண்டின் கீழ் ரூ.15.00 இலட்சம் மதிப்பீட்டில் பாலம் மற்றும் நான்குப்புறம் தடுப்புச்சுவர் கட்ட நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு பணி நடைபெற்றுக் கொண்டுள்ளது. இப்பாலத்தின் நடுவில் தற்போது வருடத்தின் அனைத்து நாட்களிலும் அதிக அளவில் தண்ணீர் ஓடிக்கொண்டிருக்கும் நிலையில் இந்நீரை மாற்று வழியில் திருப்பவும் மற்றும் பாலத்தில் நடுபகுதியில் Centering மற்றும் கம்பி கட்டும் பணி நடைபெற வேண்டியுள்ளதால் பாலத்தின் அடிவாரத்தில் சிமெண்ட் கான்கிரீட் அமைத்தல், நான்கு சுற்றுப்புறமும் சுற்றுச்சுவர் அமைக்க தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.6.75 லட்சம் ஆகும். இச்செலவினத்தை பொதுநிதியின் கீழ் மேற்கொள்ளவும், அவசரம் அவசியம் கருதி நகராட்சிகளின் சட்ட விதிகள் 1920 பிரிவு 15ன் கீழ் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள திரு.நசுருதீன், ஒப்பந்ததாரருக்கு ரூ.674594/– தொகை வழங்கப்பட்டதற்கும் மன்றத்தின் பார்வைக்கும், பதிவிற்கும் வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதி அளிக்கலாம்.

**பொருள் எண்.10**

நெல்லியாளம் நகராட்சியில் கீழ்காணும் ஒப்பந்ததாரர் M/s. S.S & CO என்பவர் 2017 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை வழங்கப்படவேண்டிய வைப்பு தொகை நிலுவையினை வழங்க கோரி 28.07.2021 அன்று மனு சமர்ப்பித்துள்ளார்கள். 2012–2013 முதல் 2017–2018 வரையிலான வருடத்திற்கான வைப்பு தொகைகள் Lapsed Register-க்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதால் ரூ.151560/–ஐ M/s. S.S & CO என்பவருக்கு வழங்க தனி அலுவலரின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1) | S.S & CO | 151560/– |

**அலுவலக குறிப்பு**

அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.11**

நெல்லியாளம் நகராட்சியில் கீழ்காணும் ஒப்பந்ததாரர் திரு.சுலைமான் என்பவர் ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை வழங்கப்படவேண்டிய வைப்பு தொகை நிலுவையினை வழங்க கோரி 04.08.2021 அன்று மனு சமர்ப்பித்துள்ளார்கள். 2012–2013 முதல் 2017–2018 வரையிலான வருடத்திற்கான வைப்பு தொகைகள் Lapsed Register-க்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதால் ரூ.1000/–ஐ திரு.சுலைமான், என்பவருக்கு வழங்க தனி அலுவலரின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1) | திரு.சுலைமான் | 1000/– |

**அலுவலக குறிப்பு**

அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.12**

நெல்லியாளம் நகராட்சியில் கீழ்காணும் ஒப்பந்ததாரர் திரு.ரஹமத்துல்லா என்பவர் ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை வழங்கப்படவேண்டிய வைப்பு தொகை நிலுவையினை வழங்க கோரி 16.08.2021 அன்று மனு சமர்ப்பித்துள்ளார்கள். 2012–2013 முதல் 2017–2018 வரையிலான வருடத்திற்கான வைப்பு தொகைகள் Lapsed Register-க்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதால் ரூ.29000/–ஐ திரு.ரஹமத்துல்லா, என்பவருக்கு வழங்க தனி அலுவலரின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1) | திரு.ரஹமத்துல்லா | 29000/– |

**அலுவலக குறிப்பு**

அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.13**

நெல்லியாளம் நகராட்சி ஆணையாளருக்கு பயன்படுத்தப்படும் TN43X 2905 எண் பொளிரோ வாகனத்தின் உதிரிபாகங்கள் பழுதடைந்துள்ளதை பணிமனைக்கு அனுப்பி பணிகள் மேற்கொள்ளும் பணிக்கு 19/08/2021 அன்று பெறப்பட்ட விலைப்புள்ளி தனிஅலுவலரின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | விலைப்புள்ளி அளித்துள்ள நிறுவனங்களின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1) | Benz Automobiles, Gudalur | 20425/– |
| 2) | Brothers Auto Garage, Gudalur | 18930/– |
| 3) | Friends Auto Industries, Gudalur | 18716/– |

**அலுவலக குறிப்பு**

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள M/s.Friends Auto Industries, Gudalur நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்கவும், பட்டியல் தொகை வழங்கவும் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.14**

நெல்லியாளம் நகராட்சியில் கீழ்காணும் ஒப்பந்ததாரர்கள் நெல்லியாளம் நகராட்சியிலிருந்து 2016 ஆம் ஆண்டு முதல் 2020 ஆம் ஆண்டு வரை வழங்கப்படவேண்டிய வைப்பு தொகை நிலுவையினை வழங்க கோரி 04.08.2021 அன்று மனு சமர்ப்பித்துள்ளார்கள். 2012–2013 முதல் 2017–2018 வரையிலான வருடத்திற்கான வைப்பு தொகைகள் Lapsed Register-க்கு கொண்டு செல்லப்பட்டுள்ளதால் ரூ.2513976/–ஐ கீழ்காணும் ஒப்பந்ததாரருக்கு வழங்க தனி அலுவலரின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண். | ஒப்பந்ததாரர் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1) | திரு.பி.அம்சா | 62319 |
| 2) | திரு.பி.அசரப் | 198703 |
| 3) | திரு.ரஹீம் | 107442 |
| 4) | திரு.பி.ராயின் | 897901 |
| 5) | திரு.பி.சலீம் | 50194 |
| 6) | திரு.பி.ரஷீத் | 136120 |
| 7) | M/s.ராயின் கன்ஸ்ட்ரக்ஷன் | 1061297 |
| மொத்தம் | | 2513976/– |

**அலுவலக குறிப்பு**

அனுமதி அளிக்கலாம்.

**பொருள் எண்.15**

நெல்லியாளம் நகராட்சியில் பொதுநிதி 2020-2021 –ம் நிதி ஆண்டில் சேலக்குன்னா ஆதிவாசி காலனியில் தடுப்புச்சுவர் அமைத்தல் பணிக்கு தயார்செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.5.00/– இலட்சத்திற்கு தீர்மான எண் 179/2020 நாள் 27.11.2020 நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நிர்வாக அனுமதிக்கேற்ப ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த திரு. E.J. ஷாஜி ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை நெல்லியாளம் நகர்மன்ற தீர்மான எண் 14/2021 நாள் 12.02.2021 தேதியில் ஒப்புக்கொண்டு பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.

பணி உத்தரவிற்கேற்ப ஒப்பந்ததாரரால் பணி மேற்கொள்ளப்பட்டது.

பணி நடைபெறும் இடத்தின் மண் தன்மைக்கேற்பவும் மூல மதிப்பீட்டில் அனுமதிக்கப்பட்ட சில இனங்களில் அளவுகள் கூடுதலாக செய்ய வேண்டியுள்ளது. சில இனங்களில் அனுமதிக்கப்பட்ட அளவுகளை விட குறைவாக செய்ய வேண்டியிருந்தது.

பணியின் முழுமையும் உபயோகமும் கருதி இவ்வாறு ஒரு சில இனங்க.ளில் ஏற்படும் கூடுதல் அளவுகளை அனுமதித்து மூலமதிப்பீடுத் தொகைக்குள் மிகாத வகையில் பணி முடிக்க வேண்டியிருந்தது.

இது குறித்து பொறியாளர், நகராட்சி ஆணையாளர் நெல்லியாளம் நகராட்சி அவர்களின் நேராய்வுகளின் பொழுது உரிய விளக்கம் தெரிவித்து பணியினை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு பணி முடிக்கப்பட்டது.

மேற்குறிப்பிட்டவாறு தேவைகளின் அடிப்படையில் கூடுதல் அளவுகளை அனுமதித்து மூல மதிப்பீடுத் தொகைக்கு மிகாமல் செய்து முடித்ததற்கும் திருத்தி மதிப்பீடு தயாரிக்கவும், நகர்மன்ற முன் அனுமதி எதிர் நோக்கி பட்டியல் தொகை வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றத்தின் அனுமதி வழங்கலாம்.
2. தேவையின் அடிப்படையில் மூல மதிப்பீட்டில் உள்ள ஒரு சில இனங்களில் ஏற்படும் கூடுதல் அளவுகளை மூல மதிப்பீட்டுத் தொகைக்கு மிகாமல் அனுமதித்து செய்ய முடித்ததற்கும் திருத்திய மதிப்பீட்டிற்கும் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.16**

நெல்லியாளம் நகராட்சியில் பொதுநிதி 2020-2021 –ம் நிதி ஆண்டில் மாமுண்டி காலனி பகுதியில் சோலார் விளக்குகள் அமைக்கும் பணிக்கு தயார்செய்யப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ.8.60/– இலட்சத்திற்கு தீர்மான எண் 179/2020 நாள் 27.11.2020 நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. நிர்வாக அனுமதிக்கேற்ப ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு குறைந்த ஒப்பந்தப்புள்ளி அளித்த திரு.அருண்பிரதர்ஸ் ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியை நெல்லியாளம் நகர்மன்ற தீர்மான எண். 14/2021 நாள் 12.02.2021 தேதியில் ஒப்புக்கொண்டு பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது.

பணி உத்தரவிற்கேற்ப ஒப்பந்ததாரரால் பணி மேற்கொள்ளப்பட்டது.

பணி நடைபெறும் இடத்தின் மண் தன்மைக்கேற்பவும் மூல மதிப்பீட்டில் அனுமதிக்கப்பட்ட சில இனங்களில் அளவுகள் கூடுதலாக செய்ய வேண்டியுள்ளது. சில இனங்களில் அனுமதிக்கப்பட்ட அளவுகளை விட குறைவாக செய்ய வேண்டியிருந்தது.

பணியின் முழுமையும் உபயோகமும் கருதி இவ்வாறு ஒரு சில இனங்க.ளில் ஏற்படும் கூடுதல் அளவுகளை அனுமதித்து மூலமதிப்பீடுத் தொகைக்குள் மிகாத வகையில் பணி முடிக்க வேண்டியிருந்தது.

இது குறித்து பொறியாளர், நகராட்சி ஆணையாளர் நெல்லியாளம் நகராட்சி அவர்களின் நேராய்வுகளின் பொழுது உரிய விளக்கம் தெரிவித்து பணியினை தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு பணி முடிக்கப்பட்டது.

மேற்குறிப்பிட்டவாறு தேவைகளின் அடிப்படையில் கூடுதல் அளவுகளை அனுமதித்து மூல மதிப்பீடுத் தொகைக்கு மிகாமல் செய்து முடித்ததற்கும் திருத்தி மதிப்பீடு தயாரிக்கவும், பட்டியல் தொகை வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு**

1. மன்றத்தின் அனுமதி வழங்கலாம்.
2. தேவையின் அடிப்படையில் மூல மதிப்பீட்டில் உள்ள ஒரு சில இனங்களில் ஏற்படும் கூடுதல் அளவுகளை மூல மதிப்பீட்டுத் தொகைக்கு மிகாமல் அனுமதித்து செய்ய முடித்ததற்கும் திருத்திய மதிப்பீட்டிற்கும் தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கவும் மன்றம் அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.17**

அரசு ஆணை எண் G.O (4D) No.2 நாள்.26/02/2021–ன்படி அம்மா உணவக பணியாளர்களுக்கு தினக்கூலி ரூ.250/–லிருந்து ரூ.325/–ஆக உயர்த்தி ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளதால் இந்நகராட்சியில் அம்மா உணவகத்தில் பணிபுரியும் பணியாளர்களுக்கு மார்ச் 2021 முதல் உயர்த்தப்பட்ட தினக்கூலி வழங்குவதற்கு தனி அலுவலரின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.18**

நெல்லியாளம் நகராட்சி பொது சுகாதாரப் பணிகளுக்கென வாகனங்கள் இயக்க 2 ஓட்டுநர்களை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு தற்போது பணிபுரிந்து வருகின்றனர். இந்த ஒப்பந்தம் 31/08/2021 உடன் முடிவடைவதால் 01/09/2021 முதல் 31/03/2022 முடிய திரு.J.பிஜு, J.P.Traders என்பவரின் பழைய ஒப்பந்தப்புள்ளியின் விலை விகிதத்திலேயே நீட்டிப்பு செய்து பணிகள் மேற்கொள்ளவும் பட்டியல் தொகை வழங்கவும் தனி அலுவலரின்அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.19**

நெல்லியாளம் நகராட்சி அலுவலகத்திற்கு புள்ளிவிவர குறிப்பாளர் ஒரு நபரை ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு தற்போது பணிபுரிந்து வருகின்றனர். இந்த ஒப்பந்தம் 31/08/2021 உடன் முடிவடைவதால் 01/09/2021 முதல் 31/03/2022 முடிய M/s.கிங்ஸ் கம்யூட்டர் சென்டர் என்பவரின் பழைய ஒப்பந்தப்புள்ளியின் விலை விகிதத்திலேயே நீட்டிப்பு செய்து பணிகள் மேற்கொள்ளவும் பட்டியல் தொகை வழங்கவும் தனி அலுவலரின்அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதி வழங்கலாம்.

**பொருள் எண்.20**

நெல்லியாளம் நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் பயன்பாட்டில் உள்ள TN43Z4514 எண் கொண்ட டம்பர் பிளேசர் வாகனத்திற்கு வருடாந்திர பராமரிப்பு பணிகள் செய்து தகுதி சான்று பெரும் பணிக்கு 26.08.2021 அன்று பெறப்பட்ட விலைப்புள்ளிகள் தனி அலுவலரின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | விலைப்புள்ளி அளித்த நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | M/s.Sree Lakshmi Auto Garrage, Pandalur | 32700/– |
| 2 | M/s.Friends Auto Garrage, Pandalur | 33850/– |
| 3 | M/s.SRK Auto Garrage, Gudalur | 33150/– |

**அலுவலக குறிப்பு**

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள M/s.Sree Lakshmi Auto Garage, Pandalur நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்கவும், பட்டியல் தொகை வழங்கவும் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.21**

இந்நகராட்சியின் பொதுசுகாதாரப்பிரிவில் பயன்பாட்டில் உள்ள TN43Z4515 வாகனத்திற்கு 2014 ஆம் ஆண்டு டயர்கள் வாங்கப்பட்டு மூன்று முறை ரீபெல்ட் செய்து ஏழாண்டு காலம் 139000 கி.மீ இயங்கியுள்ளது. தற்போது மேற்படி வாகனத்தின் டயர்கள் ரீபெல்ட் செய்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளதால் 6 எண்கள் டயர்கள் சப்ளை செய்யும் பணிக்கு 25.08.2021 அன்று பெறப்பட்ட விலைப்புள்ளிகள் தனி அலுவலரின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | விலைப்புள்ளி அளித்த நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | M/s.Sree Hari Tyres, Gudalur | 68400/– |
| 2 | M/s.Balakrishna Tyres, Coimbatore | 68700/– |
| 3 | M/s.Rajali Tyres, Coimbatore | 69000/– |

**அலுவலக குறிப்பு**

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள M/s.Sree Hari Tyres, Gudalur நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்கவும், பட்டியல் தொகை வழங்கவும் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.22**

நெல்லியாளம் நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் பயன்பாட்டில் உள்ள TN43Y8673, TN43Y8679 மற்றும் TN43Y8897 எண் கொண்ட வாகனங்களின் டயர்கள் தேய்மானமடைந்துள்ளது. மேற்படி வாகனத்தின் டயர்கள் ரீபெல்ட் செய்து பயன்படுத்த இயலாத நிலையில் உள்ளதால் ஒரு வாகனத்திற்கு 4 எண்கள் வீதம் மூன்று வாகனங்களுக்கு 12 டயர்கள் சப்ளை செய்யும் பணிக்கு 25.08.2021 அன்று பெறப்பட்ட விலைப்புள்ளிகள் தனி அலுவலரின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | விலைப்புள்ளி அளித்த நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | M/s.Sree Hari Tyres, Gudalur | 38400/– |
| 2 | M/s.Balakrishna Tyres, Coimbatore | 39000/– |
| 3 | M/s.Rajali Tyres, Coimbatore | 39600/– |

**அலுவலக குறிப்பு**

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள M/s.Sree Hari Tyres, Gudalur நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்கவும், பட்டியல் தொகை வழங்கவும் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.23**

நெல்லியாளம் நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் பயன்பாட்டில் உள்ள TN43Y8679 வாகனத்தின் கிளட்ச் டிஸ்க் மற்றும் பிரேக் பேடு தேய்மானமடைந்து வாகனம் இயக்கு முடியாத நிலையில் உள்ளதால், பொதுசுகாதாரப் பணியின் அவசியம், அவசரம் கருதி மேற்படி வாகனத்திற்கு பழுது நீக்க பணிகள் மேற்கொள்ள **26.08.2021** அன்று பெறப்பட்ட விலைப்புள்ளிகள் தனி அலுவலரின் பார்வைக்கும், அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | விலைப்புள்ளி அளித்த நிறுவனத்தின் பெயர் | தொகை ரூ. |
|---|---|---|
| 1 | M/s.Sree Lakshmi Auto Garrage, Pandalur | **8800/–** |
| 2 | M/s.Friends Auto Garrage, Pandalur | **9000/–** |
| 3 | M/s.SRK Auto Garrage, Gudalur | **9200/–** |

**அலுவலக குறிப்பு**

வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள M/s.Sree Lakshmi Auto Garage, Pandalur நிறுவனத்தின் விலைப்புள்ளியை ஏற்று பணி உத்திரவு வழங்கவும், பட்டியல் தொகை வழங்கவும் அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.24**

நெல்லியாளம் நகராட்சிக்குட்பட்ட அம்மா உணவகத்திற்கு தற்போது காய்கறிகள் விநியோகிக்க திருமதி.மினி என்பவருக்கு கடந்த **31/08/2021** முடிய மன்றத்தின் அனுமதி பெறப்பட்டுள்ளது. தற்போது **4** மாதங்களுக்கு பழைய விலைப்புள்ளியின் அடிப்படையிலேயே **31/12/2021** முடிய அன்னாரையே காய்கறிகள் விநியோகம் செய்ய அனுமதி வேண்டி மன்றத்தின் ஒப்புதல் வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அவசரம் அவசியம் கருதி அனுமதிக்கலாம்.

**பொருள் எண்.25**

நெல்லியாளம் நகராட்சி கொரோனா நோய் தடுப்பு பணிகளில் தடுப்பூசி போடப்பட்டு வருகிறது. இதுதொடர்பாக மாவட்ட ஆட்சியர் நீலகிரி அவர்களின் ஆய்வுக்கூட்டத்தில் தெரிவித்துள்ளபடி நகராட்சி மூலம் வாகனம் ஏற்பாடு செய்து வீடு வீடாக சென்று தடுப்பூசி விரைவாக போடப்பட வேண்டும் தெரிவிக்கப்பட்டது. எனவே பணியின் அவசியம் கருதி தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகளின் சட்டம் **1920** பிரிவு **15–**ன்படி விலைப்புள்ளி பெற்று M/s.Golden Tours and Travels-Almson அவர்கள் மூலம் நான்கு வாகனங்கள் பணிகளில் ஈடுபடுத்தப்பட்டதற்கும் அதற்கான தொகை வழங்குவதற்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு**

அனுமதி வழங்கலாம்.

<u>பொருள் எண்.26</u>

நெல்லியாளம் நகராட்சி கொரோனா நோய் தடுப்பு பணிகளில் பொதுமக்களுக்கு கொரோனா நோய் குறித்து கணக்கெடுப்பு செய்ய மாவட்ட ஆட்சியர் அவர்களால் அறிவுறுத்தப்பட்டது. மேற்படி கணக்கெடுப்பு பணிகளில் ஈடுபடுத்தப்பட்ட பணியாளர்களுக்கு தொகை வழங்க மன்றத்தின் அனுமதிக்கும் பார்வைக்கும் வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு</u>

அனுமதி வழங்கலாம்.

31/8/21

தனி அலுவலர்,(பொ)
நெல்லியாளம் நகராட்சி

31/8/21